06707

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

OLD

61 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

| | |
|---|---|
| භූගෝල විද්‍යාව | I, II |
| புவியியல் | I, II |
| Geography | I, II |

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் : ...............................

## புவியியல் I

※ இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.
※ ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப **எல்லா** வினாக்களுக்கும் **இவ்விடைத்தாளிலேயே** விடை எழுதுக.

● 1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து, **புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

**1.** வளிமண்டலத்தில் மின்னியல் (electric) செயன்முறைகள் பரந்தளவில் இடம்பெறுவது ........................................ மண்டலத்திலாகும்.
(இடை/ மாறன் / வெப்ப)

**2.** மழை அல்லது பனி உருகலின் பின்னர் புவியின் உட்பகுதிகளுக்குள் ஊடுபரவிச் செல்வது ........................................ நீர் என அறியப்படும்.
(உடன்தோன்று / பாறைக் குழம்பு / வளிமண்டல)

**3.** அண்மைக் காலத்தில் செயற்படத் தொடங்கிய ஹெக்லா எரிமலை அமைந்துள்ள இடம் ........................................ ஆகும்.
(யப்பான் / ஐஸ்லாந்து / சிசிலி)

**4.** மணற் பாலைவனங்களுடன் தொடர்புபட்ட நிலவுருவம் ........................................ ஆகும்.
(நீள்குன்று/ பீடக்கிடைத்திணிவு / மற்றக்ஹோர்ன்)

**5.** ரஷியாவில் அமைந்து காணப்படும் இடைவெப்ப வலயப் புல்நிலங்கள் ........................................ என அறியப்படும்.
(ஸ்ரெப்ஸ் / வெல்ட் / தைக்கா)

**6.** இலங்கையிலுள்ள ................................ காடுகள், 2000 மி.மீற்றருக்கு மேற்பட்ட வருடாந்த மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன.
(என்றும் பசுமையான வரண்ட கலப்பு / அயன ஈர / மொந்தானை)

**7.** நெற் பயிர்ச்செய்கைக்கு மிகவும் பொருத்தமானது ........................................ மண் ஆகும்.
(வண்டல் கலந்த களி / உவர் கலந்த மணல் / மட்களி மற்றும் செம்பூரான்)

**8.** இலங்கையின் சனத்தொகைப் பரம்பலைப் பாதிக்கின்ற சமூகக் காரணிக்கு ஓர் உதாரணமாக ........................................ என்பதைக் குறிப்பிட முடியும்.
(சேவை வசதிகள் / கைத்தொழில்கள் / அரச கொள்கைகள்)

**9.** இலங்கையின் பண்டைக்காலக் குளக் குடியிருப்புகளில், வீடுகள் ........................................ பாங்கிலேயே அமைவுபெற்றிருந்தன.
(கொத்து / நேர்கோட்டு / சிதறலான)

**10.** தனியொரு நீரேந்து பகுதியிலிருந்து ஆரம்பமாகிப் பின்னர் பல்வேறு திசைகளிலும் பாய்ந்து செல்லும் ஆறுகளினால் ................................................ வடிநிலப் பாங்கானது உருவாக்கப்படுகின்றது.
(மரநிகர் / ஆரை / அளியடைப்பு)

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

- **11** தொடக்கம் **20** வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் *ச* ஐயும் பிழையாயின் பி ஐயும் சுற்றி வட்டம் வரைக.

**11.** உயரத்துடன் வெப்பநிலையில் ஏற்படும் வீழ்ச்சியானது மாறன் மண்டலத்தின் ஒரு விசேட அம்சமாகும். ச / பி

**12.** புவியின் அக மையமானது இரும்பு மற்றும் நிக்கல் ஆகியவற்றின் சேர்க்கையைக் கொண்டுள்ளது எனக் கருதப்படுகின்றது. ச / பி

**13.** புவியின் உட்பகுதியிலிருந்து நிலைக்குத்தாக ஏற்படும் அமுக்கத்தின் காரணமாக குறைகள் உருவாக்கப்படுகின்றன. ச / பி

**14.** கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டின்படி, அயனக் காலநிலையின் உப வகையாக விளங்கும் அயன மழைக் காடுகள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினைக் கொண்டிருக்கின்றன. ச / பி

**15.** கியூபா, பிரேசில், சீனா மற்றும் இந்தியா ஆகியன உலகில் கரும்புச் சீனியை உற்பத்தி செய்யும் நாடுகளுள் மிக முக்கியமானவையாகும். ச / பி

**16.** இலங்கையின் சனத்தொகையில் ஏறக்குறைய 70 சத வீதத்தினர் நகரப் பகுதிகளிலும் பெருந்தோட்டத் துறையிலும் வாழ்கின்றனர். ச / பி

**17.** ஐக்கிய அமெரிக்காவிலுள்ள மான்செஸ்டர், லிவர்பூல் மற்றும் கிளாஸ்கோ என்பன இரும்பு மற்றும் உருக்கு உற்பத்தி மையங்களாகும். ச / பி

**18.** 'கரையோரச் சூழலியல்' தொகுதிக்கு ஏற்ப தம்மை மாற்றிமைக்கக்கூடிய ஒரு தாவரச் சமூகம் கண்டல்கள் ஆகும். ச / பி

**19.** தற்பொழுது, இலங்கையின் வர்த்தகம் மற்றும் போக்குவரத்தில் இடைநின்று உதவும் (Mediator) மிக முக்கியமானதொரு வகிபங்கினை தொடர்பாடல் வலைப்பின்னல் கொண்டிருக்கின்றது. ச / பி

**20.** உலகில், அண்மையில் அதிகளவு இயற்கை அனர்த்தங்கள் இடம்பெறும் வலயமாக ஆசியா இனங்காணப்பட்டுள்ளது. ச / பி

- **21** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

**21.** புவியில் தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண் அங்கிகள் உயிர் வாழும் படையானது ........................................ மண்டலம் என அறியப்படும்.

**22.** புவிமேற்பரப்பின் 71% ........................................ கோளத்துக்குரியதாகும்.

**23.** புவிமேற்பரப்பில் உள்ள மெல்லிய படையானது ........................................ என அறியப்படும்.

**24.** ........................................ மண், கோதுமைப் பயிர்ச்செய்கையில் மிக முக்கியமான காரணியாகும்.


**25.** இலங்கையில் நெற் பயிர்ச்செய்கையானது மிகக் குறைந்தளவில் ........................................ மாவட்டத்திலேயே பரம்பிக் காணப்படுகின்றது.

**26.** நிலையான இரசாயனச் சேர்க்கையைக் கொண்ட இயற்கையான அசேதனப் பதார்த்தம் ........................................ என அறியப்படும்.

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

● **27** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தினைப் பயன்படுத்தி விடை எழுதுக.




**27.** வரைபடத்தில் **A-B** கோட்டினால் குறித்துக் காட்டப்படுவது ................................................ சாய்வு ஆகும்.

**28.** வரைபடத்தில் **C-D** கோட்டினால் குறித்துக் காட்டப்படும் நிலவுருவம் ............................................. ஆகும்.

**29.** வரைபடத்தில் **E-F** கோட்டினால் குறித்துக் காட்டப்படும் நிலவுருவம் ....................................... ஆகும்.

**30.** வரைபடத்தில் காட்டப்படும் பகுதியானது ஒரு ............................................. வடிநிலப் பாங்கினைக் கொண்டிருக்கின்றது.

● **31** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் **இலக்கத்தை** எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**31.** வளிமண்டலத்துக்கும் நீர்க்கோளத்துக்கும் இடையில் இடம்பெறும் நீர்ப் பரிமாற்றச் செயன்முறையானது அறியப்படுவது
(1) நீரியல் வட்டம் எனவாகும். (2) ஆவியாக்கம் எனவாகும்.
(3) உயிர்ப்பு எனவாகும். (4) ஓடுங்கல் எனவாகும். (.........)

**32.** சப்ரகமுவா மலைத்தொடருக்கு உரியதாகக் காணப்படும் மலைகளைக் கொண்டிருக்கும் சரியான விடையினைத் தெரிவுசெய்க.
(1) கொக்காகல, நுவரகல (2) குக்குளுகல, கொன்கல
(3) கோவிந்தகெல, ஹினிதும (4) இங்கினியாகல, குக்குளுகல (.........)

**33.** இலங்கையில் சிறு ஏற்றுமதிப் பயிர்கள், மிக அதிகளவில் பரம்பிக் காணப்படும் இரண்டு மாவட்டங்கள்
(1) மாத்தளை மற்றும் இரத்தினபுரி (2) கம்பகா மற்றும் கேகாலை
(3) மாத்தளை மற்றும் கண்டி (4) இரத்தினபுரி மற்றும் கேகாலை (.........)

**34.** மீளப் பயன்படுத்தக்கூடிய சோடி மூலவளங்கள்
(1) மரங்கள் மற்றும் கனியங்கள் (2) மண் மற்றும் உலோகங்கள்
(3) வனவிலங்குகள் மற்றும் பெற்றோலியம் (4) நிலம் மற்றும் மண் (.........)

**35.** அத்திலாந்திக் சமுத்திரத்தையும் பசிபிக் சமுத்திரத்தையும் இணைக்கும் கால்வாய்,
(1) வெல்லண்ட் (2) கீல் (3) பனாமா (4) சுயெஸ் (.........)

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

**36.** கீழே நிரல் **I** இல் கனியங்கள் சிலவற்றின் பெயர்களும், நிரல் **II** இல் அவை அமைவுபெற்றுள்ள பிரதேசங்களும் காட்டப்பட்டுள்ளன. நிரல் **I** இல் காட்டப்பட்டுள்ள ஒழுங்கிற்கு அமைய, நிரல் **II** இல் உள்ள பிரதேசங்களைப் பொருத்திப் பார்க்கும் பொழுது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| i. நிலக்கரி | A - அப்பலாச்சியன் மலைகள் |
| ii. பெற்றோலியம் | B - விற்வாட்டஸ்ராண்ட் |
| iii. வெள்ளீயம் | C - சவூதிஅரேபியா |
| iv. தங்கம் | D - மலேசியா |
| | E - மெக்சிக்கோ |

(1) A, B, C, D (2) A, C, D, B (3) B, D, E, C (4) E, A, D, B (.........)

**37.** இலங்கையில் இல்மனைட் கனியங்கள் பரந்தளவில் பரம்பிக் காணப்படும் பகுதிகள்,
(1) நிலாவெளி மற்றும் மாரவில (2) கைக்காவல மற்றும் புல்மோட்டை
(3) இரணைமடு மற்றும் நாத்தாண்டியா (4) புல்மோட்டை மற்றும் நிலாவெளி (.........)

**38.** இடப்பெயர்வைப் பாதிக்கின்ற தள்ளுவிசைக் காரணிகளைச் சோடியாகக் கொண்டிருக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) தொழில்களின் பற்றாக்குறை மற்றும் குறைவான வீடுகள்
(2) அதிகளவு தொழில்கள், உயர்நிலையிலான வளிமாசடைதல்
(3) சாதகமான சூழல், குறைவான கல்வி வசதிகள்
(4) குறைவான உட்கட்டுமான வசதிகள், உயர்மட்டத்திலான தொழில்நுட்ப நன்மைகள் (.........)

**39.** உயிரியல் இடர்களைக் கொண்டிருக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) நிலச்சரிவுகள், வெள்ளப்பெருக்குகள் (2) காட்டுத்தீ, தொற்றுநோய்கள்
(3) இடிமின்னல், வரட்சி (4) சூறாவளி, காட்டுத் தீ (.........)

**40.** பொது நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படும் இரண்டு படங்களைக் கொண்டிருக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.
(1) இலங்கையின் சுவர்ப் படம், இலங்கையின் மெற்றிக் படம்
(2) இடவிளக்கப் படம், வீதிப் படம்
(3) சுற்றுலாப் படம், இலங்கையின் ஓரங்குலப் படம்
(4) புவிச்சரிதவியல் படம், இலங்கையின் மெற்றிக் படம் (.........)

* *

[பக். 5 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

61 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

## புவியியல் II

- ※ இவ்வினாத்தாள் **I, II, III** என்னும் **மூன்று** பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ※ பகுதி **I** இலுள்ள வினா கட்டாயமானது. அதில் **(அ), (ஆ), (இ)** ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- ※ பகுதி **II** இலிருந்து **இரண்டு** வினாக்களுக்கும் பகுதி **III** இலிருந்து **இரண்டு** வினாக்களுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- ※ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

**1.** (அ) 1:50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தினைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் (பக்கம் **8**) பயன்படுத்துக.

இலக்கம் (i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

(i) இல. ① இனால் குறித்துக் காட்டப்படுவது என்ன?
(பவளக் கற்பார் / மணல் மேடு / அலைவேலி) (01 புள்ளி)

(ii) இல. ② இனால் குறித்துக் காட்டப்படுவது என்ன?
(ஆற்றுமுகம் / கழிமுகம் / கடனீரேரி) (01 புள்ளி)

(iii) இல. ③ இனால் குறித்துக் காட்டப்படும், இளஞ்சிவப்பு நிறத்தினால் நிழற்றப்பட்டுள்ள பகுதி என்ன?
(சுற்றுலா வலயம் / பாதுகாப்புப் பகுதி / அமைக்கப்பட்ட பகுதி) (01 புள்ளி)

(iv) இல. ④ இனால் குறித்துக்காட்டப்படுவது என்ன?
(சுற்றுலா விடுதி / ஹோட்டல் / வாடி வீடு) (01 புள்ளி)

(v) இப்பகுதியில் பரந்தளவில் பரம்பிக் காணப்படும் வர்த்தகப் பயிர் என்ன? (01 புள்ளி)

(vi) **A** தொடக்கம் **B** வரை விரிவடைந்து காணப்படும் நிர்வாக எல்லை என்ன? (01 புள்ளி)

(vii) **C - D** இனால் விமானப் பாதையொன்று குறித்துக் காட்டப்படுகின்றது. அதன் நீளத்தினைக் கிலோ மீற்றர்களில் குறிப்பிடுக. (01 புள்ளி)

(viii) **E** எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் கோடு என்ன? (01 புள்ளி)

(ix) **F, G, H** நாற்பக்கல்களில் உள்ள மூன்று பகுதிகளில் நாளாந்தம் பல்வேறு தேவைகளுக்காகப் பெரும் எண்ணிக்கையிலான மக்களைக் கவர்ந்து வரும் பகுதி எது? (01 புள்ளி)

(x) மேலே **F, G** மற்றும் **H** ஆகிய மூன்று பகுதிகளுள், மிக உயர்ந்தளவிலான சமயப் பல்வகைமையைக் கொண்டிருக்கும் பகுதி எது? (01 புள்ளி)

(ஆ) தரப்பட்டுள்ள உலகப் படத்தில் (பக்கம் **9**), கீழே (i) இலிருந்து (v) வரை தரப்பட்டுள்ளவற்றைப் பொருத்தமான படவரைகலையியல் நுட்பங்களைப் பயன்படுத்தி **குறித்துப் பெயரிடுக.**

(i) முரே - டார்லிங் ஆறு
(ii) கலிபோர்ணியா குடாநாடு
(iii) அந்தீஸ் மலை
(iv) கருங்கடல்
(v) ஹட்சன் குடா

(05 புள்ளிகள்)

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

(இ) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் (பக்கம் **9**) கீழே (i) இலிருந்து (v) வரை தரப்பட்டுள்ளவற்றைப் பொருத்தமான படவரைகலையியல் நுட்பங்களைப் பயன்படுத்தி **குறித்துப் பெயரிடுக.**

(i) கற்பிட்டி குடாநாடு

(ii) வளவை ஆறு

(iii) குமண பறவை சரணாலயம்


(iv) வாழைச்சேனை

(v) மாத்தளை நகரம்

(05 புள்ளிகள்)

## பகுதி II

**2.** புவி வளிமண்டலத்தின் படைகளைக் குறித்துக் காட்டும் வரைபடம் இங்கு காட்டப்படுகின்றது. அதனை நன்கு பரிசீலித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.





(i) வரைப்படத்திற்கமைய வளிமண்டலத்தின் படைகள் 1 மற்றும் 2 ஆகிய ஒவ்வொன்றினையும் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) உம்மால் மேலே (i) இல் பெயரிடப்பட்ட 1வது படையின் விசேட அம்சங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) உயிர்க்கோளத்தின் எல்லைகள் எவையென்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(b) உயிர்க்கோளத்தின் **இரண்டு** முனைப்பான அம்சங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

● கீழே தரப்பட்டுள்ள உலகப் படத்தினைப் பயன்படுத்தி **3, 4** மற்றும் **5** ஆம் வினாக்களுக்கு விடை தருக.




**3.** (i) மேலேயுள்ள உலகப் படத்தில் Ⓐ மற்றும் Ⓑ எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள **இரண்டு** காட்டு வகைகளை Ⓐ,Ⓑ ஒழுங்குமுறையில் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலையுதிர் காடுகளின் விசேட அம்சங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) உலகக் காட்டு வளங்கள் ஏன் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை **மூன்று** காரணிகளின் துணையுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

**4.** (i) மேலேயுள்ள உலகப் படத்தில் வர்த்தகரீதியாக நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் **இரண்டு** ஆற்றுப் பள்ளத்தாக்குகள் Ⓒ மற்றும் Ⓓ எழுத்துக்களால் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. **அவ்விரண்டு** ஆற்றுப் பள்ளத்தாக்குகள் ஒவ்வொன்றையும் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) ஆசியப் பிரதேசத்திலுள்ள நாடுகளின் நெற் பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தி ஆகியவற்றுடன் இணைந்து காணப்படும் **மூன்று** பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) உலகின் நெற் பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்தி ஆகியவற்றுடன் இணைந்து காணப்படும் அண்மைக் காலப் போக்குகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

5. மேலேயுள்ள உலகப் படத்தில் பருத்திப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் இரண்டு பகுதிகள் Ⓔ மற்றும் Ⓕ எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.


(i) அப்பகுதிகளுக்குரிய **இரண்டு** நாடுகள் ஒவ்வொன்றையும் முறையே குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) உலகின் பருத்திப் புடவைக் கைத்தொழிலின் விரிவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ள **மூன்று** காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) பருத்திக் கைத்தொழிலில் காணப்படும் அண்மைக் காலப் போக்குகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினைப் பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

## பகுதி III

6. இலங்கையின் தரைத்தோற்ற வலயங்களை விளக்கமாகக் காட்டும் படம் ஒன்று தரப்பட்டுள்ளது. அதனை நன்கு பரிசீலித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




(i) படத்தில் இல. ① மற்றும் ④ இனால் குறித்துக் காட்டப்படும் **இரண்டு** தரைத்தோற்ற வலயங்கள் எவையென்பதை முறையே பெயரிடுக (02 புள்ளிகள்)

(ii) இல. ⑤ இனால் குறித்துக் காட்டப்படும் தரைத்தோற்ற வலயத்தில் காணப்படும் **மூன்று** இடவிளக்கவியல் அம்சங்களைப் பெயரிட்டு, அவை **ஒவ்வொன்றுக்கும்** உதாரணங்களைத் தருக. (03 புள்ளிகள்)

(iii) இல. ① இன் தரைத்தோற்ற வலயத்தில் மேற்கொள்ளப்படும் **மூன்று** பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினைப்** பற்றி விவரிக்குக. (05 புள்ளிகள்)

7. (i) இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கை பரந்தளவில் பரம்பிக் காணப்படும் **இரண்டு** மாவட்டங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) தேயிலைப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான **மூன்று** பௌதிகக் காரணிகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையின் தேயிலை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் காணப்படும் **மூன்று** போக்குகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றினை** விவரிக்குக. (05 புள்ளிகள்)

8. (i) (a) இலங்கையில் நகர சனத்தொகையை மிக உயர்வாகக் கொண்டிருக்கும் மாவட்டத்தினையும்
(b) இலங்கையில் கிராமிய சனத்தொகையை மிக உயர்வாகக் கொண்டிருக்கும் மாவட்டத்தினையும்
முறையே குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையின் சனத்தொகைப் பரம்பலில் செல்வாக்கு செலுத்தியுள்ள
(a) பௌதிகக் காரணி
(b) பொருளாதாரக் காரணி மற்றும்
(c) சமூகக் காரணி
ஆகியவற்றை முறையே குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) அண்மைக் காலத்தில் இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பில் காணப்படும் **மூன்று** விசேடமான பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

9. (i) தற்காலத்தில் இலங்கையில் வாழும் பழங்குடி மக்கள் மூன்று வகைகள். அவற்றுள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் பழங்குடி மக்கள் வாழ்ந்துவரும் **மூன்று** பகுதிகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் பண்டைய காலத்தில் வாழ்ந்த பழங்குடி மக்களின் வாழ்க்கை முறைகளில் இருந்து தற்போதைய பழங்குடி மக்களின் வாழ்க்கைமுறையானது முனைப்பான மாற்றங்களை அடைந்து வந்துள்ளது. அவற்றினை உருவாக்கிய **மூன்று** காரணங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

※ ※ ※

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව/இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்/Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர) ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

විභාග අංකය / சுட்டெண் / Index Number ....................................

06707

**(61)** භූගෝල විද්‍යාව **II**
புவியியல் **II**
Geography **II**

පරීක්ෂකවරයාගේ ප්‍රයෝජනය පිණිසයි. / பரீட்சகரின் உபயோகத்துக்கு மட்டும் / For Examiner's Use Only

**1.** (අ) /(அ) /(a)

(i) ....................................................................................................

(ii) ....................................................................................................

(iii) ....................................................................................................

(iv) ....................................................................................................

(v) ....................................................................................................

(vi) ....................................................................................................

(vii) ....................................................................................................

(viii) ....................................................................................................

(ix) ....................................................................................................


(x) ....................................................................................................

10


[ பக். 9 ஐப் பார்க்க

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

(ආ) /(ஆ) /(b)




(ඇ) /(இ) /(c)




1. (අ) (அ) (a) $\frac{}{10}$ (ආ) (ஆ) (b) $\frac{}{5}$ (ඇ) (இ) (c) $\frac{}{5}$ = $\frac{}{20}$

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

61 | II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2017 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2017 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2017

භූගෝල විද්‍යාව II / புவியியல் II / Geography II

128




SCALE 1 : 50 000

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/

Download all Past Papers : https://bookbeekid.com/resource/past-papers/